**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 11 /2024

பெயர்:– பழனியம்மாள் நாள்:28.01.2026

பி.வா.சா. 4 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

கடந்த 01.09.2014ம் தேதி அன்று நான், எனது அம்மா மலையம்மாள் எனது சகோதரரின் மகன் சண்முகம், சண்முகத்தின் மனைவி நதியா, மகள் ஜோதிமணி, கண்ணம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து ஈஸ்வரன் மற்றும் பாபு ஆகியோருக்கு ஒரு கிரையப்பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் நானும் எழுதி கொடுக்கவில்லை எனது அம்மாவும் எழுதி கொடுக்கவில்லை. எழுநூத்தி மங்கலம் கிராமம், வெட்டுக்காட்டூரில் வசிக்கும் மாரப்ப கவுண்டர் மலையம்மாள் என்பவர் எனது அம்மா. கரூர் மாவட்டம், வேலாயுதம் பாளையம் அருகில் உள்ள கந்தம்பாளையத்தில் வசிக்கும் சண்முகம் மனைவி பழனியம்மாள் என்பவர் யார் என்றால் நான்தான். என்னிடம் வாக்காளர் அடையாள அட்டை உள்ளதா என்றால் உள்ளது. எனது வாக்காளர் அட்டையுடன் 01.09.2014ம் தேதி அன்று கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையபத்திரத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது அம்மா மலையம்மாள், நான், வாதி ஜோதிமணி, எனது சகோதரனின் மனைவி கண்ணம்மாள், மகன் சண்முகம், சண்முகத்தின் மனைவி நதியா ஆகியோர்கள் சார்பதிவாளர் அலுவலகம் வந்தார்களா என்றால் வந்தார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து ஈஸ்வரன் மற்றும் பாபு ஆகியோர்களுக்கு கிரையம் செய்த கொடுத்தோமா என்றால் அவர்களுக்கு கொடுக்கவில்லை. வேறு ஒருவருக்கு கொடுத்தோம். அந்த கிரையப்பத்திரத்தில் எனது தந்தை எழுதி வைத்த உயில் சாசனம், எனது தாயார் மலையம்மாள் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம், சாமியப்பன் மகன் சண்முகம் அவரது மனைவி நதியாளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரங்களை குறிப்பிட்டு அதன் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ளது

**Copy of Deposition**

என்றால் சரிதான். அந்த கிரையத்தின்மூலம் பெறப்பட்ட கிரையத்தொகை முழுவதும் எனக்கும், எனது தாயார் மலையம்மாள் மற்றும் எனது சகோதரனின் மனைவி கண்ணம்மாள் ஆகியோருக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் எனது தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் உயில் பத்திரத்தை ஒப்புக்கொண்டு விட்டேன் என்பதால் தாவா சொத்தில் நான் உரிமை கோர முடியாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனது தந்தை உயிருடன் இருந்த காலத்திலும்,எனது சகோதரன் உயிருடன் இருந்த காலத்திலும், எனது சகோதரன் மகன் உயிருடன் இருந்த காலத்திலோ தாவா சொத்தில் பாகம் கேட்டேனா என்றால் இல்லை. எனது சகோதரர் மற்றும் அவரது மகன் இறந்த பின்னிட்டுதான் சொத்தில் பாகம் கேட்கிறேனா என்றால் ஆமாம். இந்த வழக்கில் கண்டுள்ள சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.01.28 17:38:37 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |